வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=
# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 11.10.2024 வெள்ளிக்கிழமை | இதழ் : 285 | பக்கங்கள் : 12

# இலங்கை பொருளாதாரம் ஸ்திர நிலையை அடைந்தது

## உலக வங்கி தெரிவிப்பு




கொழும்பு, ஒக்ரோபர் 11

**இலங்கையின் பொருளாதார நிலை ஸ்திரமடைந்துள்ளது என்று தெரிவித்துள்ள உலக வங்கி, சீர்திருத்தங்களை தொடர்வது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளது.**

2024இறுதியில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 4.4 வீதமாக காணப்படும் என தெரிவித்துள்ள உலக வங்கி முன்னைய எதிர்வுகூறலை விட இது முன்னேற்றகரமான நிலையென குறிப்பிட்டுள்ளது.

தொழில்துறை மற்றும் சுற்றுலாத்துறையில் 4 காலாண் டுகளாக ஏற்பட்டுள்ள முன்னேற்றமும் முக்கியமான கட்டமைப்பு மற்றும் கொள்கை சீர்திருத்தங்களுமே இதற்கு காரணம் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

எனினும், பொருளாதார மீட்சி இன்னமும் பலவீனமான நிலையிலேயே உள்ளது. நுண் பொருளாதார ஸ்திரதன்மையை பேணுதல், கடன் மறுசீரமைப்பை வெற்றிகரமாக பூர்த்தி செய்வது, வருமானத்தை அதிகரித்து வறுமையை குறைப்பதற்காக கட்டமைப்பு சீர்திருத் தங்களை தொடர்ந்து முன்னெடுப்பது ஆகியவற்றிலேயே பொருளாதார மீட்சி தங்கியுள்ளது என்றும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

(ஐ)



## இலங்கை தமிழ் அரசுக் கட்சி யாழ்ப்பாணத்தில் வேட்புமனு!

யாழ்ப்பார்ணம், ஒக். 11

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்துக்கான வேட்புமனுவை நேற்று வியாழக்கிழமை தாக்கல் செய்தது.

கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட முதன்மை வேட்பாளர் சிவஞானம் சிறீதரன் யாழ். மாவட்ட செயலகத்தில் வேட்புமனுவை தாக்கல் செய்தனர்.

இதன்போது, கட்சியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் வேட்பாளர்கள் எம். ஏ. சுமந்திரன், எஸ். சி. சி. இளங்கோவன், கேசவன்

11

## தமிழ் அரசு அதிருப்தி குழு இன்று வேட்புமனு

யாழ்ப்பாணம், ஒக். 11

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அதிருப்தி குழு இன்று வெள்ளிக்கிழமை வேட்புமனுவை தாக்கல் செய்யவுள்ளது.

ஜனநாயக தமிழ் அரசுக் கட்சி என்ற பெயரில் சுயேச்சையாக கேட்கவுள்ள இந்த அணியில் நேற்றிரவு

11

## காணி பிணக்கால் வாள்வெட்டு; ஒருவர் பலி; மற்றொருவர் காயம்!

### ஓமந்தையில் துயர சம்பவம்

- குமார. கோகுலன் -

வவுனியா, ஒக். 11

காணி தொடர்பான பிணக்கு வாள்வெட்டில் முடிந்ததில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந் துள்ளார்.

வவுனியா - ஓமந்தை - கதிரவேலு பூவரசன் குளம் பகுதியில் நேற்று வியாழக்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வாள்வெட்டில் உயிரிழந்தவரின் குடும்பத்துக்கும் வாள்வெட்டு நடத்தியதாகக் கூறப் படும் தரப்பை சேர்ந்த குடும்பத்துக்கும் இடையே காணி ஒன்று தொடர்பில் பல நாட்களாக

11

## ஒக். 30, நவ. 01, 04இல் தபால் மூல வாக்களிப்பு!

### தவறவிட்டோருக்கு நவ. 7, 8இல்!

கொழும்பு, ஒக். 11

பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் ஒக்ரோபர் 30, நவம்பர் 01, 04ஆம் திகதிகளில் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அத்துடன், இந்த நாட்களில் வாக்களிக்கத் தவறியவர்கள் எதிர்வரும் நவம்பர் 7, 8ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பாராளுமன்றத் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது. தேர்தல்

11



## முதல் பெண் மாவீரர் மாலதிக்கு கிளிநொச்சியில் நினைவேந்தல்

கிளிநொச்சி, ஒக். 11

ஈழ விடுதலைப் போரில் விடுதலைப் புலிகளின் சார்பில் போரிட்ட முதல் பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கிளிநொச்சியில் கடைப்பிடிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின தர்மபுரம் வட்டார கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நினைவேந்தல் நிகழ்வில், பாராளுமன்ற மேனாள் உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்துகொண்டு நினைவுரையாற்றினார்.

அத்துடன், அந்தப் பகுதியை சேர்ந்த 200 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

## தனியாக வசித்து வந்த மூதாட்டி எரிந்த நிலையில் சடலமாக மீட்பு!

- எஸ்.தில்லைநாதன் -

வடமராட்சி, ஒக். 11

வீட்டில் தனியாக வசித்து வந்த மூதாட்டி ஒருவர் தீயில் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று வியாழக்கிழமை காலை அவரின் சடலம் மீட்கப்பட்டது. இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் வடமராட்சி - கரணவாய் தெற்கு - மாந்தோப்பை சேர்ந்த குணராஜலிங்கம் ஞானேஸ்வரி (வயது 70) என்பவராவார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது, சடலமாக மீட்கப்பட்ட மூதாட்டி உறவினர்களின் வீட்டுக்கு சென்றுவிட்டு நேற்றுமுன்தினமே

11

## த. தே. ம. முன்னணி வேட்பாளர் தமிழ் அரசு கட்சியிலும் போட்டி!

மன்னார், ஒக். 11

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் வேட்பாளராக பெயரிடப்பட்ட யுவதி இலங்கை தமிழ் அரசுக் கட்சியுடன் இணைந்து வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

தலைமன்னாரை சேர்ந்த குறித்த யுவதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்து செயல்பட்டு வந்துள்ளார். அண்மைநாட்களாக

11




## தேசிய மக்கள் சக்தியும் நேற்று யாழில் வேட்புமனு

யாழ்ப்பாணம், ஒக். 11

ஜனாதிபதி அநுரகுமாரவின் தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்துக்கான வேட்பு மனுவை நேற்று தாக்கல் செய்தது.

அந்தக் கட்சியின் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும், யாழ். மாவட்ட அமைப்பாளருமான இராமலிங்கம் சந்திரசேகர் உள்ளிட்ட குழுவினர் வேட்புமனுவை யாழ். மாவட்ட செயலகத்தில் சமர்ப்பித்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில், மருத்துவர் எஸ். சிறிபவானந்தராசா, க. இளங்குமரன், எம்.மோகன், பூ. சிறிதரன், கா. பிரகாஷ், இ. வெண்ணிலா, ஜெ.ரஜீவன், தே. தஜீவன், உ. கீர்த்தி ஆகியோர் போட்டியிடுகின்றனர்.(ஐ)

**உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாட்களிலிருந்து இயக்குநர் சங்கரின் திரைப்படம் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற திருப்தி தமிழ் அரசியலை அவதானித்துக் கொண்டிருக்கின்ற ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டிருக்கும்.

அவ்வளவு 'திறில்' ஆகவும், அடுத்து என்ன நடக்கும் என்ற பரபரப்புடனும் தேர்தல் களம் நகர்ந்து கொண்டிருக்கின்றது.

அவுஸ்திரேலியாவிலிருந்து நண்பர் ஒருவர் நீண்டகாலத்துக்குப் பின்னர் தொலைபேசி அழைப்பில் வந்தார். தேர்தலையொட்டி நடக்கும் சம்பவங்கள் பற்றி ஒன்று விட்டு ஒன்றாக எல்லாவற்றையும் கேட்டு முடித்தபின்னர்:

"அப்ப தந்தை செல்வா சொன்ன மாதிரி, இனி தமிழ் மக்களை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்றுதானே சொல்கிறீர்?" என்று கேட்டார்.

நான் திரும்ப அவரிடம் கேட்டேன், "ஏன் கடவுளுக்கு வேறு வேலை எதுவும் இல்லையோ? தான் தற்கொலை செய்து கொள்ளப்போகிறேன் என்று அடம்பிடிக்கும் ஒருவரை காப்பாற்ற வேண்டிய தேவை எதற்கு கடவுளுக்கு?" என்று.

அவருடைய கவலை எல்லாம் இந்தத் தமிழ்த் தேசியவாதிகள் என்று கூறிக்கொள்பவர்கள் இப்படி தங்களுக்கிடையே முட்டி மோதிக்கொண்டிருக்க, தேசியக் கட்சிகள் இடையில் புகுந்து மக்களை தம் பக்கம் திருப்பி விடுவார்களோ என்பதுதான்.

நான் திரும்பிக் கேட்டேன், அப்படி திருப்பினால்தான் என்ன என்று.

அது எனக்கும் ஒரு விருப்பமில்லாத ஒன்றாக இருந்தாலும் இந்தத் தேசியவாதிகளின் கூத்துகளை அறிகின்ற போது அப்படித்தான் சொல்ல வைத்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தேர்தலை பகிஷ்கரிக்கக் கோரியதும் – அதனையடுத்து தேர்தலில் அறுபத்தி எட்டு வீதமானவர்கள் வாக்களிக்க மிகுதி முப்பத்தி இரண்டு வீதமானவர்கள் வாக்களிக்காமல் விட்டதும் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமது கோரிக்கையை ஏற்று முப்பது வீதமானவர்கள் வாக்களிக்கவில்லை என்று 'கொமடி' பண்ணியதைப்பற்றி இந்தப் பத்தியில் எழுதிய போது ஒரு விடயத்தை குறிப்பிட்டிருந்தது ஒரு வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

கடந்த இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டு தேர்தலிலும் பதினைந்தாம் ஆண்டு தேர்தலிலும் பதினையாயிரம் வாக்குகளைப் பெற்ற முன்னணியினர் இருபதாம் ஆண்டு நடந்த தேர்தலில் ஐம்பத்தி ஐயாயிரம் வாக்குகளைப் பெற்றிருந்தனர்.

அது, அவர்களின் அரசியல் நடவடிக்கைகளால் கவரப்பட்டு, மக்கள் அவர்களுக்கு அளித்த வாக்குகள் அல்ல என்றும் நல்லாட்சி அரசாங்க காலத்தில் தமிழ் அரசு கட்சி. அதாவது தமிழ் தேசியக் கூட்டமைப்பு நடந்துகொண்ட விதமும் செய்த அரசியலும்தான் மக்கள் அவர்களுக்கு வாக்களித்ததற்கு காரணம் என்று எழுதியிருந்தேன். அதாவது, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது தமக்கு இருந்த வெறுப்பை வெளிப்படுத்த, அவர்களுக்கு வேறு வழி தெரியவில்லை. அதனால், அவர்கள் இன்னுமொரு தமிழ்த் தேசியக் கட்சிக்கு வாக்களிப்போம் என்று வாக்களித்தனர். இந்த விவரத்தை அந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அந்த விவரங்களை அவுஸ்திரேலியாவிலிருந்து அழைத்த நண்பரும் படித்திருக்கவேண்டும். "தமிழ் அரசும் மற்றைய தேசியக் கட்சிகளும் நடந்து கொள்கின்ற இந்த விடயங்களால், இந்தத் தடவையும் முன்னணி இன்னும் அதிகமாக பெற்றுவிடுமோ?" என்று கேட்டார் அந்த நண்பர். அப்படிக் கிடைத்தால் கூட பரவாயில்லையே, அவை தமிழ்த் தேசியத்துடன் நிற்கின்றன என்றாவது சந்தோசப்படலாம் என்றேன்.

அதுவல்ல, இன்று நாம் இந்தப் பத்தியில் சொல்ல வருவது:

பாராளுமன்ற தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வதற்கான கடைசிநாள் இன்றாகும். தமிழ் அரசு கட்சியின் அதிருப்தி அணி, அதாவது ஜனநாயக தமிழ் அரசு கட்சி என்று தங்களை அழைத்துக் கொள்ளும் அணியினர் நேற்று தமது வேட்பு மனுவை தாக்கல் செய்வார்கள் என்று அறிவிப்பட்டிருந்தது. ஆனால், மாலை வரை அவர்கள் வேட்புமனுவை தாக்கல் செய்யவில்லை.

தமிழ் அரசு கட்சியிலிருந்து அரசியலுக்கு வந்து மாகாண சபையில் உறுப்பினராகவும் சில காலம் அமைச்சராகவும் இருந்த அனந்தி சசிதரனையும் தமது அணியில் சேர்த்து போட்டியிட கடைசிநேரத்தில் முயற்சி நடந்ததால், வேட்பாளர் நியமனப்பத்திரம் தாக்கல் செய்வது இன்று வரை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்றும் ஏற்கனவே, கட்டுப்பணம் செலுத்தப்பட்டு விட்டதாகவும் அந்த அணியுடன் நெருக்கமான ஒருவர் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சி தமது உத்தியோகபூர்வ வேட்பாளர் நியமனத்தை நேற்று செய்துமுடித்துவிட்டது. அந்தப் பட்டியலையும் அதிருப்தி அணியின் வேட்பாளர் பட்டியலையும் பார்த்தால், அவர்களில் யார் மேலே நிற்பார்கள் என்பதை சொல்வது சற்றுக் கடினமானதுதான்.

வேட்பாளர் நியமனப்பத்திரத்தை தாக்கல் செய்துவிட்டு அவசரம் அவசரமாக வெளியேறிய சிவஞானம் சிறீதரன், நேராக தமிழ் அரசின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசாவின் வீட்டுக்கு சென்று ஆசீர்வாதம் பெற்றிருக்கின்றார். மாவை சேனாதிராசாவை முன்னாள் தலைவர் என்று குறிப்பிட்டபோதுதான், அவுஸ்திரேலிய நண்பருடன் நடந்த சம்பாசணை ஒன்றும் ஞாபகத்துக்கு வந்தது.

அவர் கேட்டார்: "மாவை சேனாதிராசா கட்சித் தலைவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்துவிட்டேன் என்கிறார். ஆனால், செயலாளர் சத்தியலிங்கமோ தனக்கு அப்படி கடிதம் எதுவும் வரவில்லை என்கிறாரே? எவர் சொல்வதுதான் உண்மை?".

"அநேகமாக இருவர் சொல்வதும் உண்மையாகத்தான் இருக்கும், மாவை கடிதம் எழுதியது உண்மையாக இருக்கலாம். ஆனால், அதனை அனுப்புவதற்கு மறந்திருக்கலாம் அல்லது அனுப்பிவிட்டேன் என்று நினைத்துக் கொண்டு எங்கேனும் தவறுதலாக வைத்தும் இருக்கலாம். சத்தியலிங்கத் துக்கு கிடைக்காதுதானே." என்றேன் நான்.

நண்பர் ஒரு விடயத்தை சொல்லி விட்டு தொடர்பை துண்டித்துவிட்டார்:

"கடிதம் எழுதிய பின்னர் அதனை அனுப்ப மறந்துவிட்டேன். இப்போது தமிழ் அரசு ஆதரவாளர்கள் எல்லாம் என்னைப் பதவி விலகவேண்டாம் என்று கேட்டிருப்பதால் அதனை அனுப்பாமலே விட்டுவிட்டேன் என்று சொல்வாரோ தெரியவில்லையே".

- ஊர்க்குருவி

## காணிப் பிணக்குகளை தீர்ப்பதற்கு விசேட குழு

யாழ்ப்பாணம், ஒக். 11

வடக்கில் காணி தொடர்பான பிணக்குகளை தீர்ப்பதற்கு விசேட ஆணைக்குழு உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண காணி பிரச்னைகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் ஆளுநரின் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கருத்து வெளியிட்ட ஆளுநர்,

ஏழை மக்களுக்கு உரிய காணிகள் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். காணி வழங்குவதில் இடம்பெறும் முறைகேடுகள் அநீதிகள் தொடர்பாகவும் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்குரிய பொறுப்பு அலுவலர்கள், தொடர்ந்தும் தவறு செய்யும்பட்சத்தில் உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். சில மாவட்டங்களில் மட்டுமே காணி அலுவலர்கள் சிறந்த முறையில் பணியாற்றுகின்றனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் காணி தொடர்பான பிரச்னைகள் அதிகமாக உள்ளதால் அங்கு விசேட கவனம் எடுக்க வேண்டும். காணி தொடர்பான பிணக்குகளை தீர்ப்பதற்கு விசேட ஆணைக்குழு உருவாக்க வேண்டும் - என்றார். (ஐ)

## ஆயுதம் தேடி முள்ளிவாய்க்காலில் 3ஆவது நாளாகவும் நேற்று அகழ்வு!



முல்லைத்தீவு, ஒக். 11

முள்ளிவாய்க்காலில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை தேடி மூன்றாவது நாளாக நேற்று வியாழக்கிழமையும் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் இளம் ஒளி விளையாட்டுக் கழக மைதானத்தில் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள் இருக்கின்றன என்று தெரிவித்தே இந்த அகழ்வு முன்னெடுக்கப்படுகிறது.

கொழும்பு நீதிமன்றத்தின் அனுமதியுடன் கொழும்பில் இருந்து வருகை தந்த பொலிஸ் குழுவினரால் செவ்வாய்க்கிழமை மாலை இந்த அகழ்வுப் பணி ஆரம்பமானது.


முள்ளிவாய்க்கால் கிழக்கு, மேற்கு பகுதிகளில் அண்ணளவாக 11க்கு மேற்பட்ட இடங்களில் இதுவரை அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், இந்த அகழ்வுப் பணிகளின்போது எந்த ஆயுதங்களும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழில் மொட்டும் வேட்புமனு தாக்கல்!

யாழ்ப்பாணம், ஒக். 11

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சி யாழ். மாவட்டத்துக்கான வேட்புமனுவை நேற்று வியாழக்கிழமை தாக்கல் செய்தது.

அந்தக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் தம்பித்துரை ரஜீவ், கீதநாத் காசிலிங்கம் உள்ளிட்டோர் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர். (ஐ-05)



## பொதுஜன பெரமுன கட்சி வன்னியில் வேட்புமனு!

யாழ்ப்பாணம், ஒக். 11

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட வன்னி மாவட்டத்துக்கான வேட்புமனுவை பொதுஜன பெரமுன நேற்று வியாழக் கிழமை தாக்கல் செய்தது.

எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி பாராளு மன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொது ஜன பெரமுன கட்சி மொட் டுச் சின்னத்தில் போட்டியிடுகின்றது.

நேற்றையதினம், வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் பணிமனையில் அந்தக் கட்சியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளர் துசாரி முத்துமாலி தலைமையில் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது. (ஐ)

## ஐ. த. தே. கூட்டணியினர் வன்னியில் வேட்புமனு!

வவுனியா, ஒக். 10

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி நேற்று தாக்கல் செய்தது.

வவுனியா மாவட்ட செயலகத்தில் அந்தக் கூட்டணியின் முதன்மை வேட்பாளர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் வேட்புமனு தாக்கல் நடைபெற்றது.

இதன்போது, அந்தக் கூட்டணியின் சார்பில் போட்டியிடுபவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## தேர்தலில் போட்டியிட அர்ச்சுனா கட்டுப்பணம்!

யாழ்ப்பாணம், ஒக். 11

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக யாழ். மாவட்ட செயலகத் தில் மருத்துவர் அர்ச்சுனா நேற்று வியாழக்கிழமை கட்டுப்பணம் செலுத்தி னார். சாவகச்சேரி மருத்துவமனை தொடர்பான சர்ச்சைகளால் அதிகம் பேசப்பட்டவர் மருத்துவர் இ. அர்ச்சுனா. நீதிமன்ற உத்தரவில் மறியலில் வைக்கப்பட்டிருந்த இவர் நேற்றுமுன்தினம் பிணையில் வெளிவந்தார்.

இந்த நிலையில், நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் சுயேச்சையாக போட்டியிடப் போவதாக அறிவித்து கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

இன்று வெள்ளிக்கிழமை நண்பகலுடன் வேட்புமனு தாக்கல் செய்வதற்கான காலக்கெடு நிறைவடைகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
11.10.2024 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சங்கு சின்னமும் அரசியலில் அறமும்

சங்கு சின்னத்தை முன்வைத்து பொதுச் சபையினர் ஆங்காங்கே அறம் பற்றி பேச முற்படுவதாகத் தெரிகின்றது. அவர்கள் அவ்வாறு பேசுவது சரியானதா - அதற்கான தார்மீக தகுதி அவர்களுக்கு உண்டா? சங்கு சின்னத்தை ஒரு தேர்தல் தந்திரமாகவே ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினர் எடுத்திருக்கின்றனர். தேர்தல் என்றால் ஒவ்வொரு கட்சியும் தங்களது வெற்றி பற்றியே சிந்திக்கும். இதில், ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

சங்கு சின்னத்தை எடுத்திருக்கும் அரசியல் கட்சிகள் தங்களின் நியாயத்தை கூறுகின்றனர். குறிப்பாக, பொதுச் சபையின் சார்பில் பங்கு கொண்டவர்கள் ஒற்றைச் சொல்லில் அதனை எடுக்க வேண்டாம் - கைவிடுங்கள் என்று அழுத்தமாகக் கூறவில்லை என்கின்றனர். மறுபுறம் பொதுச் சபையின் சார்பில் பொதுவெளிகளில் பேசுகின்றவர்களில் சிலர் தாங்கள் அவ்வாறு கூறவில்லை என்கின்றனர். இதில் எவர் கூறுவது சரி - எவர் கூறுவது தவறு என்பதற்கு அப்பால் சங்கு சின்னத்தை பொதுக் கட்டமைப்பிலுள்ள கட்சியொன்று எடுத்ததை அறம் சார்ந்து விவாதிக்க முடியுமா?

முதலாவது விடயம், பொதுச் சபைக்கும் ஏழு அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான உடன்பாட்டில் பொது வேட்பாளராக நிறுத்தப்படும் குறிப்பிட்ட நபருடன் பொருத்தமான உடன்பாடு செய்யப்படுமென்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அந்த உடன்பாடு எங்கே? இதற்கு பொதுச் சபையினரால் பதிலளிக்க முடியாது. ஏனெனில், அவ்வாறானதோர் உடன்பாடு செய்யப்படவில்லை. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் பொதுச் சபையின் உடன்பாட்டை பொதுச் சபையே முறையாகக் கைக்கொள்ளவில்லை.

பொது வேட்பாளராக நிறுத்தப்பட்ட பா. அரியநேத்திரன் இப்போது, கொள்கைரீதியாக பொது வேட்பாளரை எதிர்ப்பதாகவும் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதே சரியென்று முடிவெடுத்த தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு வேட்பாளருக்கு ஆதரவாக பிரசாரம் செய்யப் போவதாக அறிவித்திருக்கின்றார். அறம் பற்றிப் பேசுவதாயின், அரியநேத்திரனின் தீர்மானம் அறம் சார்ந்ததா? எந்தக் கட்சிகள் அவருடன் பொது வேட்பாளர் விடயத்தில் உடன்பட்டு கைகோத்து பயணித்தனவோ அவர்களுக்கு எதிராகவே அரியநேத்திரன் பிரசாரம் செய்யப் போகின்றார்.

மட்டக்களப்பில் சங்கு சின்னத்தில் ஓர் அணியும் வீட்டுச் சின்னத்தில் இன்னொரு தரப்பும் மோதவுள்ள நிலையில், சங்குக்கு சங்கு ஊதப் போவதாக சூளுரைத்து அரியநேத்திரனுக்கு எதிராக பிரசாரங்களை முன்னெடுத்த சாணக்கியன் அணிக்கு ஆதரவாகவே அரியநேத்திரன் பிரசாரங்களை செய்யவுள்ளார். இந்த விடயத்தில் அறம் சார்ந்து அரியநேத்திரனை பொதுச் சபையால் கட்டுப்படுத்த முடியுமா? அது முடியாது என்றால் மற்றவர்களின் அறம் பற்றிப் பேசுவதற்கு பொதுச் சபைக்கு என்ன தகுதியுண்டு?

அவர் தனிப்பட்ட காரணங்களை கூறினாலும் இறுதியில் அவர் சாணக்கியன் அணியை பலப்படுத்தும் பணியையே செய்யப் போகின்றார். இந்தப் பின்புலத்தில் சங்குச் சின்னம் தொடர்பில் அறம் பற்றிப் பேசும் தகுதிநிலையை பொதுச் சபை முற்றிலும் இழந்துவிட்டது. பொதுச் சபையின் தவறு எங்கு ஆரம்பிக்கின்றது என்றால், பொதுச் சபை அரசியலை கையாளுவது தொடர்பில் அரைகுறையான பார்வையையே கொண்டிருந்திருக்கின்றது. மேலும் - விடயங்களின் பக்க விளைவுகளை ஆராயாமல் சிறுபிள்ளைத்தனமாக முடிவெடுத்திருக்கின்றது.

பொதுச் சபையை வழிநடத்தியவர்களில் சிலர் கருத்துருவாக்கிகள் - புத்திஜீவிகளாக தங்களை அடையாளப்படுத்தியிருந்த போதிலும்கூட, ஒரு தீர்மானத்தை மேற்கொள்ளும்போது அதன் பக்கவிளைவுகள் குறித்துத் தெளிவாக ஆராய்ந்தே தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் பொதுச் சபையின் அணுகுமுறை சிறுபிள்ளை வேளாண்மை போன்றே காணப்படுகின்றது. தூரநோக்கின்றி முன்னெடுக்கப்படும் பக்க விளைவுகளை ஆராயாமல் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் அனைத்தும் இப்படித்தான் முடிவுறும். அரசியலை கையாளும் விடயத்தில் பொதுச் சபை தோல்வியடைந்துவிட்டது என்பதே உண்மை.

# தமிழரின் சுயநிர்ணயத்தை ஏற்றால் அநுரவுடன் சேர்ந்து செயல்பட தயார்!

## விக்னேஸ்வரன் கூறுகிறார்



யாழ்ப்பாணம், ஒக். 11

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசு ஏற்றுக்கொண்டால் அவர்களுடன் சேர்ந்து முன்செல்லத் தயாராகவுள்ளோம் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.


மேலும், வடக்கு, கிழக்கில் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்தனர். அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை இருக்கின்றது என்பதை அநுர குமார அரசு உண்மையில் ஏற்றுக்கொண்டால் அரசுடன் சேர்ந்து முன்செல்லத் தயாராக இருக்கின்றோம்.

தமிழ் அரசுக் கட்சி முன்னர் இருந்த பலரும் தற்போது அந்தக் கட்சிக்குள் இப்போது நடைபெறும் சம்பவங்கள் காரணமாக வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். அதிலும் பலர் கடுமையாகப் பாதிக்கப்பட்டு மனவருத்தத்தில் உள்ளனர். இதனால் ஒரு சிலர் வெவ்வேறு கட்சிகளுடன் இணைந்துள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியினர் அதிகளவான இளைஞர்களை உள்ளீர்த்தமை போன்று நாமும் இளைஞர்களை உள்ளீர்த்துப் பலமான ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவோம் - என்றார். (ஐ)

# தமிழ் அரசின் கொள்கைகளை சுமப்போரை வெல்ல செய்யுங்கள்!

## மாவை சேனாதிராசா தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 11

"இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கொள்கைகளை சுமந்து தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்யுங்கள்", என்று அந்தக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் சி. சிறீதரன் நேற்று வியாழக் கிழமை அவரை சந்தித்து ஆசி பெற்றபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி நேற்றைய தினம் யாழ். மாவட்டத்துக்கான வேட்பு மனுவை தாக்கல் செய்தது. முதன்மை வேட்பாளர் சிறீதரன் வேட்புமனுவை தாக்கல் செய்தார். இதன் பின்னர், தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதி ராசாவை சந்தித்து ஆசி பெற்றிருந்தார். (ஐ)

# 21 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் கைது!


யாழ்ப்பாணம், ஒக். 11

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 21 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பினுள் 4 படகுகளில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டிருந்த வேளை நேற்றுமுன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களையும் , அவர்களின் படகுகளையும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு சென்ற கடற்படையினர் 21 கடற்தொழிலாளர்களையும் விசாரணைகளின் பின்னர் நீரியல் வளத்துறையினர் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். புதியவர்களின் நட்பால் உற்சாகம் அடைவீர்கள். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும்.

**இடபம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும்.

**மிதுனம்**

பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**கடகம்**

அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக்கொள்வீர்கள்.

**சிம்மம்**

உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக்கொள்வீர்கள். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**

திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். தாயாருக்கு மருத்துவ செலவுகள் அதிகமாகும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**துலாம்**

உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்பீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**விருட்சிகம்**

கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**தனுசு**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**மகரம்**



எதிர்காலம் பற்றிய பயம் வீண் டென்ஷன் வந்து செல்லும். வாகனம் பழுதாகும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும்.

**கும்பம்**

எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். மதிப்பு கூடும் நாள்.

**மீனம்**

உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விஜபிகள் உதவுவார்கள். வாகன வசதி பெருகும். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. சாதித்துக் காட்டும் நாள்.

வரலாற்று சிறப்புமிக்க யாழ்ப்பாணம் வண்ணை சிறீ வெங்கடேஷ வரதராஜப் பெருமாள் கோவில் பெருந்திருவிழாவின் ஏழாம் நாள் திருவிழாவான வெண்ணைத்தாழி சேவை திருவிழா பக்திபூர்வமாக நடைபெற்றது.

# யாழ். மாவட்டத்தில் 13 - 15ஆம் திகதி வரை டெங்கு கட்டுப்பாட்டு களப்பரிசோதனை

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ். மாவட்டத்தில் 13ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை விசேட டெங்கு கட்டுப்பாட்டு களப்பரிசோதனை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாக மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

13ஆம் திகதி - கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்களின் ஒத்துழைப்போடு கிராம மட்ட அமைப்புகளை வலுப்படுத்தி அவர்கள் மூலமாக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி பொது மக்கள் குடியிருப்புகளில் டெங்கு நோய் பரவலை தடுப்பது தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

14ஆம் திகதி - அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் அலுவலகங்களிலும் டெங்கு பரம்பல் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

15ஆம் திகதி காலை அனைத்து பாடசாலைகளிலும் மாலை தனியார் கல்வி நிலையங்களிலும் டெங்கு பரம்பல் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது மக்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்களை கிராம மட்ட உத்தியோகத்தர்கள் ஊடாக வழங்குவதுடன் இந்த நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (எ-05)

# ஆறு கோடி ரூபாய் பெறுமதியான போதை மாத்திரைகள் பறிமுதல்!

## விசேட அதிரடிப்படையினரால் ஒருவர் கைது

மன்னார், ஒக். 11

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர் - யுவதிகளை இலக்கு வைத்து போதை மாத்திரைகளை விற்பனை செய்து வந்த நபரொருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் பொரளை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 6 கோடி ரூபாய் பெறுமதியான 5 இலட்சத்து 99,000 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த நபர் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (எ)

# மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு யாழ்ப்பாணத்தில் விசேட கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், ஒக். 11

மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில் ஆதரவை ஊக்கப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொடுத்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது

மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பினை பெற்றுக்கொடுத்து அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கமைவாக யாழ். மாவட்டத்தில் இதுவரை தொழிலில் இணைப்புச் செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் முன்னேற்றம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, ஜெய்க்கா நிறுவனத்துடன் இணைந்து 2022 - 2025 வரையான காலப் பகுதியில் மாற்றுத்திறனாளிகளை தொழிலில் ஈடுபடும் நபர்களின் எண்ணிக்கை 50 என்ற இலக்கினை அடைவதற்கு பங்களிப்பு தெரிவித்ததுடன், இத் திட்டத்துக்குரிய மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களுடன் இணைந்து மாவட்ட ரீதியாக மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை உரிய பிரதேச செயலகத்தில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்து இந்தத் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிவரும் ஜப்பான் நாட்டின் ஜெய்க்கா நிறுவனத்துக்கும் தமது நன்றியை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் தெரிவித்தார். (எ- 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நீதியும் சுதந்திரத்துக்கான வாக்கெடுப்பும் தமிழருக்கு அவசியம்!

## ஒருங்கிணைந்த தமிழ் அமெரிக்கர்கள் குழு

நியூயோர்க், ஒக். 11

**இன்னுமோர் இனப்படுகொலையை தவிர்ப்பதற்கு தமிழ் மக்களுக்கு சர்வதேச நீதியும் சுதந்திரத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பும் அவசியம் என ஒருங்கிணைந்த தமிழ் அமெரிக்கர்கள் அரசியல் நடவடிக்கைக் குழு தெரிவித்துள்ளது.**

அமெரிக்காவை தளமாக கொண்ட புலம்பெயர் தமிழர் அமைப்பு மேலும் தெரிவித்தவை வருமாறு,

எந்த கட்சி ஆட்சியில் இருந்தாலும் சரி, சிங்கள தேசியவாதம் தமிழர்களுக்கு எதிரான பௌத்த அடிப்படைவாதம் காரணமாக இலங்கை தொடர்ச்சியாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானங்களையும் தமிழர்களுக்கான உரிமைகளையும் எதிர்த்து வந்துள்ளது.

இன்னுமோர் இனப்படுகொலையை தவிர்ப்பதற்கு தமிழ் மக்களுக்கு சர்வதேசநீதியும் சுதந்திரத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பும் அவசியம்.

இலங்கை அரசாங்கத்தின் ஆதரவுடன் சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பதை எதிர்கொள்வதற்கும் தெற்காசியாவில் பாதுகாப்பு ஸ்திரதன்மைக் காகவும் அமெரிக்காவும் சர்வதேச சமூகமும் அதற்கு ஆதரவளிக்கவேண்டும் - என்றார். (ஐ)

# கப்ரால் உள்ளிட்ட நால்வர் பிணையில் விடுவிப்பு!

கொழும்பு, ஒக். 11

முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட நால்வருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் அவர்களை பிணையில் விடுவித்துள்ளது உயர்நீதிமன்றம்.

2012ஆம் ஆண்டு இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்தபோது அரசாங்கத்துக்கு சொந்தமான பணத்தைக் கிரேக்க கடன் பத்திரங்களில் முதலீடு செய்ததன் மூலம் 184 கோடி ரூபாய்க்கும் அதிகமான நஷ்டத்தை ஏற்படுத்தினர் என்று மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உட்பட 4 பிரதிவாதிகளுக்கு எதிராக நேற்று முன்தினம் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகைகள் கையளிக்கப்பட்டதன் பின்னர், குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவரையும் தலா 10 இலட்சம் ரூபாய் பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பிரதிவாதிகள் வெளிநாடு செல்வதற்கு தடை விதித்த நீதிமன்றம், அவர்களின் கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் வெளிநாடு செல்வதாக இருந்தால் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறும் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# மின் கட்டணத்தை குறைப்பது தொடர்பில் ஆராயப்படுகிறது!

கொழும்பு, ஒக். 11

மக்களுக்கு நிவாரணமளிக்கக்கூடிய விதத்தில் மின்சார கட்டணங்கள் தொடர்பிலான விலைப் பொறிமுறைமையை மாற்றியமைப்பது தொடர்பில் ஆராயப்படுவதாக மின்சக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதயங்க ஹேமபால தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு கூடுதல் நிவாரணம் அளிக்கக்கூடிய மின்சார கட்டண முறைமையை அறிமுகம் செய்யும் நோக்கில் விலைச் சூத்திரம் மீளாய்வு செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இந்த மீளாய்வின் பின்னர், புதிய விலைப் பொறிமுறைமையை ஜனாதிபதியும் துறைசார் அமைச்சருமான அநுரகுமார திஸநாயக்க அமைச்சரவையில் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளார்.

அதன் பின்னர், இந்த யோசனை புதிய பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் - என்று தெரிய வருகின்றது. (ஐ)

# நியமன கடிதம் பெற்று தேர்தல் பணிக்கு வராவிடின் தண்டனை

## தேர்தல்கள் ஆணையாளர் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 11

பாராளுமன்ற தேர்தல் கடமைக்கான நியமனங்களை பெற்றவர்கள் பணிக்கு சமுகமளிக்காத பட்சத்தில் அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் அல்லது மூன்று வருடங்கள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தபால் மூல வாக்குகளுக்கு விண்ணப்பிக்காமை மற்றும் குறைபாடுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமை என்பன தேர்தல் கடமைகளில் இருந்து விலக்கு பெறுவதற்கு ஒரு காரணமல்ல என்றும் அவர் கூறினார்.

தேர்தல் பணிக்கு வருவதற்கான நியமன கடிதம் பெறும் அனைத்து அலுவலர்களும் உரியவாறு பணிக்கு சமுகமளிக்க வேண்டும். தங்களின் வழக்கமான பணியிடத்துக்கு சென்று வருகைப் பதிவு சான்றிதழை நிறுவனத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

தேர்தல் கடமைக்கு சமுகமளிக்காத உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் அரசமைப்பின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஒத்துழைக்க மறுப்பவர்கள் அல்லது தவறியவர்கள் - என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

# தேசிய கடன் மறுசீரமைப்பால் உழைக்கும் வர்க்கம் பாதிப்பு!

## ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 11


தேசிய கடன் மறுசீரமைப்பின் ஊடாக ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் உழைக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் ஒரு வார்த்தையேனும் பேசாமல் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் அரசாங்கம் ஒரேநாளில் இவை அனைத்துக்கும் இணக்கம் தெரிவித்தமை கவலைக்குரியது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி பணிமனையில் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தை விமர்சிப்பதற்கு நான் தயாரான இல்லை. அவர்களுக்கு இன்னும் சிறிது காலம் வழங்கப்பட வேண்டும். ஆனால், சில விமர்சனங்களை முன்வைக்க வேண்டிய தேவையும் காணப்படுகிறது.

தேசிய கடன் மறுசீரமைப்பின்போது வேலை செய்யும் மக்களுக்கும் ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. அநுரகுமார திஸநாயக்கவின் அரசாங்கம் ஒரேநாளில் இவை அனைத்துக்கும் இணக்கம் தெரிவித்தமை கவலைக்குரியது.

அத்தோடு இவர்கள் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பிலும் ஒரு வார்த்தையேனும் கூறவில்லை. அடுத்த பாராளுமன்றத்தில் இதற்காக போராடுவேன். தேசிய கடன் மறுசீரமைப்பின் ஊடாகவே ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஏற்பட்ட நட்டத்தை சரி செய்வதற்காக குரல் கொடுப்பேன்- என்றார். (ஐ)



# ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் வேட்புமனு

கொழும்பு, ஒக். 11

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் வேட்புமனு நேற்று வியாழக்கிழமை தாக்கல் செய்யப்பட்டது.

அந்தக் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ கொழும்பு மாவட்ட செயலகத்தில் வேட்புமனுவை கையளித்தார்.

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பெண் ஒருவரை கொன்ற சந்தேகநபருக்கு மறியல்!

கொழும்பு, ஒக். 11

தனிப்பட்ட தகராறில் பெண் ஒருவரைக் கொன்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெக்குண உத்தரவிட்டுள்ளார்.

காலி பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரொருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு - வாழைத்தோட்டம், ரெக்னிக்கல் சந்தி பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டார்.

கொலை செய்யப்பட்ட பெண்ணுக்கும் சந்தேக நபருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த கொலை சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# 1,412 படையினருக்கு பதவி உயர்வுகள்!

கொழும்பு, ஒக். 11

இலங்கை இராணுவத்தின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அதிகாரிகள் உள்ளிட்ட 1,412 படையினருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் விக்கும் லியனகேயின் பரிந்துரையின் பேரில் முப்படைகளின் சேனாதிபதி ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவால் இந்த பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன.

இந்த வகையில், 131 லெப்டினன்ட்கள் கப்டன் நிலைக்கும் (உபகரண பொறுப்பாளர்கள் உட்பட) மற்றும் 8 இரண்டாம் லெப்டினன்ட்கள் லெப்டினன்ட் நிலைக்கும் (நிரந்தர மற்றும் தொண்டர் படைகளின்) அதிகாரிகள் பிரிவில் இவ்வாறு நிலை உயர்வு பெற்றுள்ளனர்.

அத்துடன், 99 அதிகார ஆணையற்ற அதிகாரிகள் ஐஐ, அதிகார ஆணையற்ற அதிகாரிகள் ஐ நிலைக்கும், 185 பணிநிலை சார்ஜண்ட்கள் அதிகார ஆணையற்ற அதிகாரிகள் ஐஐ நிலைக்கும், 380 சார்ஜண்ட்கள் பணிநிலை சார்ஜண்ட் நிலைக்கும், 346 கோப்ரல்கள் சார்ஜண்ட் நிலைக்கும், 111 லான்ஸ் கோப்ரல்கள் கோப்ரல் நிலைக்கும், 152 சிப்பாய்கள் லான்ஸ் கோப்ரல் நிலைக்கும் நிரந்தர மற்றும் தொண்டர் படையணிகளில் நிலை உயர்வு பெற்றுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிக்ஸ் அமைப்பில் இணைக்க கோரிக்கை விடுத்தது இலங்கை

கொழும்பு, ஒக். 11

**இந்தியா, சீனா, பிரேசில், தென்னாபிரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் அங்கம் வகிக்கும் "பிரிக்ஸ்" அமைப்பில் இணைவதற்கு இலங்கை அரசாங்கம் கோரிக்கை முன்வைத்துள்ளது.**

பிரிக்ஸ் (BRICS) அமைப்பு 2010ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பில் உறுப்பு நாடுகளின் சனத்தொகையானது உலக சனத்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டதாகும். ஆரம்பத்தில் ஐந்து நாடுகளுடன் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டாலும் பின்னர் பல நாடுகள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

பிரிக்ஸ் நாடுகள் தமக்கு இடையிலான பொருளாதார உறவுகளை பலப்படுத்தி வருவதுடன் - இராஜதந்திர உறவுகளையும் வலுப்படுத்தி வருகின்றன.

பிரிக்ஸ் அமைப்பின் மாநாடு எதிர்வரும் 22, 23ஆம் திகதிகளில் ரஷ்யாவில் நடைபெறவுள்ளது. இதில், பிரிக்ஸ் அமைப்பில் இணைவதற்கான கோரிக்கையை இலங்கை முன்வைக்கவுள்ளது. இதற்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பில் வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், "ரஷ்யாவில் பிரிக்ஸ் மாநாடு நடைபெறவுள்ளது. இம்மாநாட்டில் பங்கேற்குமாறு ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. தேர்தல் உள்ளிட்ட காரணங்களால் ஜனாதிபதி பங்கேற்கமாட்டார். எனினும், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தலைமையிலான குழு மாநாட்டில் பங்கேற்கும்,

இதன்போது பிரிக்ஸ் அமைப்பில் அங்கத்துவத்தை பெறுவதற்குரிய விண்ணப்பத்தை இலங்கை முன்வைக்கும். இந்திய வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பின்போது அங்கத்துவத்தை பெறுவதற்கு இந்திய வெளிவிவகார அமைச்சரின் ஆதரவை கோரினோம். பிரிக்ஸ் அமைப்பில் உள்ள ஏனைய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களிடமும் இந்த கோரிக்கை விடுக்கப்படும்." - என்றார். (ஐ)

# 25,966 சுற்றுலாவிகள் 6 நாட்களில் வருகை!

SRI LANKAN TOURISM DEVELOPMENT AUTHORITY

கொழும்பு, ஒக். 11

நடப்பு மாதத்தின் முதல் 6 நாட்களில் 25 ஆயிரத்து 966 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்தியாவிலிருந்து 7,749 சுற்றுலா பயணிகளும், சீனாவிலிருந்து 2,437 சுற்றுலா பயணிகளும், ஜேர்மனியிலிருந்து 1,737 சுற்றுலா பயணிகளும் வருகை தந்துள்ளனர்.

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதிக்குள் 15 இலட்சத்து 10 ஆயிரத்து 774 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர்.

அதிகளவான சுற்றுலா பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர். 2 இலட்சத்து 94 ஆயிரத்து 305 பேர் அங்கிருந்து வருகை தந்துள்ளனர். ஐக்கிய இராச்சியத்திலிருந்து ஒரு இலட்சத்து 38 ஆயிரத்து 125 சுற்றுலா பயணிகளும், ரஷ்யாவிலிருந்து ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 294 சுற்றுலா பயணிகளும் வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

(ஐ)



# இறைவரி, சுங்க திணைக்கள அதிகாரிகளை சந்தித்த அநுர

கொழும்பு, ஒக். 11

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கும் இலங்கை சுங்கத் திணைக்களம் மற்றும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

அரசாங்கத்தின் விரிவான பொருளாதார மற்றும் ஒழுங்குபடுத்தல் மறுசீரமைப்புகளுக்கு ஏற்ப இந்த 2 திணைக்களங்களிலும் வருமானம் ஈட்டல் மற்றும் செயல்பாடுகளின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான மூலோபாய திட்டங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வருமான முகாமைத்துவம் மற்றும் வரி அறவீடுகளில் தாம் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து இரு திணைக்கள அதிகாரிகளும், இதன்போது ஜனாதிபதிக்கு விளக்கியுள்ளனர்.

இந்தப் பிரச்னைகளைத் திறம்படக் கையாள்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கும் சுங்கத் திணைக்களத்துக்கும் இடையில் வலுவான ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

வரிச் சட்டங்களின் வலுவான மற்றும் ஒருங்கிணைந்த அமுலாக்கத்தை உறுதி செய்தல், வரி ஏய்ப்பை தடுப்பது மற்றும் வருமான சேகரிப்பை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# ஹரிணி, விஜிதவின் படங்களுடன் விசேட முத்திரைகள் கையளிப்பு!

கொழும்பு, ஒக். 11

150ஆவது உலக தபால் தினத்தை முன்னிட்டு பிரதமர் ஹரிணி அமரசூரிய, அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருக்கு அவர்களின் புகைப்படங்கள் அடங்கிய விசேட தபால் முத்திரைகள் கையளிக்கப்பட்டன என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உலக தபால் தினமான நேற்று நடைபெற்ற விசேட நிகழ்வில், பிரதமர் ஹரிணி அமரசூரிய, அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். இதன்போதே இந்த விசேட முத்திரை வெளியிடப்பட்டது.



பிரதமர் ஹரிணி அமரசூரிய, அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருக்கு பரிசாக வழங்கப்பட்ட இந்தத் தபால் முத்திரைகள் உத்தியோகப்பூர்வமானவை இல்லை எனவும் இதனை தபால் சேவைகளுக்குப் பயன்படுத்த முடியாது என்றும் தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொதுமக்களும் தங்களது தனிப்பட்ட புகைப்படங்களை பயன்படுத்தி இவ்வாறான தபால் முத்திரைகளை உருவாக்க முடியும். ஆனால், அவற்றை தபால் சேவைகளுக்கு பயன்படுத்த முடியாது என்றும் தபால் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

(ஐ)

# முன்னாள் இராஜாங்க அமைச்சரின் வங்கி கணக்குள் முடக்கப்பட்டன!

கொழும்பு, ஒக். 11

முன்னாள் இராஜாங்க அமைச்சர் அனுபா பாஸ்குவலின் இரண்டு வங்கி கணக்குகளை முடக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் தொடர்பாக முன்னெடுக்கப்படும் விசாரணைகளின் ஒரு பகுதியாக முன்னாள் இராஜாங்க அமைச்சரின் இரண்டு வங்கி கணக்குகளை 2025 ஜனவரி 4ஆம் திகதி வரை முடக்கி வைக்குமாறு நீதிமன்றம் தனது உத்தரவில் தெரிவித்துள்ளது.

(ஐ)

# அதிக விண்ணப்பங்களால் நெருக்கடியில் ஜனாதிபதி!

கொழும்பு, ஒக். 11

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தேசிய மக்கள் சக்தி கட்சியில் அதிகமானோர் விண்ணப்பித்துள்ளனர். விண்ணப்பித்தவர்களில் பலருக்கு சந்தர்ப்பம் வழங்க முடியாததால் ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில், வேட்புமனுவை எதிர்ப்பார்த்து காத்திருந்தும் கிடைக்காத சிலர் மனஸ்தாபத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்று கட்சியின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மற்றும் அதற்கு முன்னர் அதிகளவில் கஷ்டப்பட்டு உழைத்தவர்கள் சிலர் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட எதிர்பார்த்திருந்தனர்.

எனினும், ஒரு கட்சியிலிருந்து போட்டியிடக் கூடிய வேட்பாளர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டதையடுத்து , கோரிக்கைகள் அதிகமாக கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் அநேகமானோருக்கு அந்த வாய்ப்பு தவறவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது தொடர்பில் அதிகளவானோர் அதிருப்தி அடைந்துள்ளனர். இதனால் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கட்சிக்குள் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# வெவ்வேறு விபத்துகளில் மூன்று பேர் உயிரிழந்தனர்!

கொழும்பு, ஒக். 11

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற வாகன விபத்துகளில் மூவர் உயிரிழந்தனர்.

நுவரெலியா - வலப்பனையில் வீதியில் நடந்து சென்ற சிறுவனையும் சிறுமியையும் ஓட்டோ மோதியது. இதில், 7 வயது சிறுவன் உயிரிழந்தார். 15 வயது சிறுமி படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேபோன்று, கொழும்பு - பாதுக்கை - தும்மோதரையில் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து ஏற்பட்ட விபத்தில் 53 வயது நபர் உயிரிழந்தார். இவர் பொலிஸ் சார்ஜன்ட் ஆவார்.

கொழும்பு - அவிசாவளையில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்தவர் தூக்கி வீசப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமல் வீரவன்ஸவின் கட்சி தேர்தலில் போட்டியிடாது!

கொழும்பு, ஒக். 11

**ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை கிடைக்க வேண்டும் என்பதற்காக நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தனது கட்சியான தேசிய சுதந்திர முன்னணி போட்டியிடாது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச அறிவித்துள் ளார்.**

"ஏகாதிபத்திய எதிர்ப்பு பாரம்பரியம் கொண்ட அரசியல் இயக்கம் என்பதாலும் ஜே.வி. பியின் வரலாற்று பாரம்பரியத்தை மதிக்கும் - அதற்கு உரித்தான கட்சி என்பதாலும் ஜனாதிபதியை அதிகாரத்துக்குக் கொண்டுவந்த மக்கள் ஆணையை பாதுகாப்பது குறித்து நாம் அர்ப்பணிப்புடன் உள்ளோம்", என்று விமல் வீரவன்ஸ விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை கிடைக்க வேண்டும் என்பதற்காக தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவின்றி அநுரகுமார திஸநாயக்க ஆட்சி புரியும் நிலையை ஏற்படுத்துவதே தனது நோக்கம் என்றும் கூறியுள்ளார். (ஐ)

# மனைவியின் கழுத்தை வெட்டிய கணவன் கைது

நுவரெலியா, ஒக். 11

மனைவியின் கழுத்தை வெட்டிய கணவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.


நுவரெலியா - டயகம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 26 வயதான 3 பிள்ளைகளின் தாயே படுகாயமடைந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கணவனிடம் மனைவி தொழிலுக்காக கொழும்புக்கு செல்வதாக கூறி தனது முன்னாள் காதலனின் வீட்டுக்கு சென்று தங்கியுள்ளார் என்று கூறப்படுகிறது.

கொழும்பு சென்ற மனைவியிடமிருந்து கணவனுக்கு தொலைபேசி அழைப்பு எதுவும் வராததால் சந்தேகமடைந்த கணவர் மனைவியின் முன்னாள் காதலனின் வீட்டுக்கு சென்றுள்ளார். அங்கு, மனைவியின் முன்னாள் காதலன் என்று கூறப்படும் நபர் இல்லாத நிலையில் அவரின் மனைவி மட்டும் இருந்துள்ளார். இதையடுத்து, கணவர் மனைவியின் கழுத்தை கத்தியால் வெட்டியுள்ளார்.

காயமடைந்த பெண்ணை அயலவர்கள் மீட்டு நுவரெலியா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)



# பதில் பிரதம நீதியரசராக முர்து நிரூபா பதவியேற்பு

கொழும்பு, ஒக். 11

பதில் பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதியரசர் முர்து நிருபா பிதுஷினி பெர்னாண்டோ நேற்று வியாழக்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க முன்னிலையில் பதவியேற்றார்.

இவரின் பதவிப் பிரமாண நிகழ்வு ஜனாதிபதி பணிமனையில் நடைபெற்றது.

2011ஆம் ஆண்டு பிரதம நீதியரசராக இருந்த ஷிராணி பண்டாரநாயக்கவுக்குப் பிறகு இலங்கை வரலாற்றில் பிரதம நீதியரசர் பதவியை வகிக்கும் இரண்டாவது பெண் நீதியரசர் முர்து பெர்னாண்டோ ஆவார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பட்டதாரியாவார். இவர் 1985ஆம் ஆண்டில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்தார். 1997ஆம் ஆண்டு அவர் பிரதி சொலிசிட்டர் ஜெனரலாகவும் 2014ஆம் ஆண்டு மேலதிக சொலிசிட்டர் ஜெனரலாகவும் பதவி வகித்திருந்தார். அத்துடன், உயர்நீதிமன்ற நீதியரசர்களில் ஒருவராக 2018ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கான வசதிகள் தொடர்பில் ஆராய முடிவு

கொழும்பு, ஒக். 11

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த வசதிகள் தொடர்பில் ஆராய்வதற்கு தற்போதைய அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்காக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மூலம் அல்லது ஏனைய அமைச்சுகள் மூலம் வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பு துறை மூலம் வழங்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் எண்ணிக்கையும் ஆராயப்படவுள்ளது. அத்துடன், இதற்காக வாடகை அடிப்படையில் கட்டங்கள் வழங்கப்பட்டிருப்பின் அதற்கு செலவிடப்படும் மாதாந்த வாடகை மற்றும் வழங்கப்பட்டுள்ள ஏனைய வசதிகள் தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களின் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் உரிமை கோரல்கள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பில் மீள ஆய்வு செய்வது தொடர்பில் அமைச்சரவை நியமித்துள்ள குழு மூலம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தேசிய மக்கள் சக்திக்கு சவாலான கட்சி இல்லை!

## லால்காந்த தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 11

தேசிய மக்கள் சக்திக்கு சவால் விடுக்கும் வகையில் எந்தவொரு கட்சியும் இல்லை. நாட்டின் பெரும்பான்மையான மக்கள் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளனர் என்று அதன் செயல்குழு உறுப்பினர் லால்காந்த தெரிவித்தார்.

கண்டி - நாவலப்பிட்டியில் நேற்று முன்தினம் நடத்திய பிரசாரக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், சிறீ லங்கா சுதந்திரக் கட்சி தற்போது எட்டாக பிளவுபட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி பெயருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது, சிறீ லங்கா பொதுஜன பெரமுன இல்லாமல் போய் விட்டது.

கண்டி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. பொதுத் தேர்தலுக்காக நாடளாவிய ரீதியில் அனைத்து பகுதி மக்களும் திசைகாட்டியை சுற்றி திரண்டு வருகின்றனர் - என்றார். (ஐ)

# சிறீ லங்கன் எயார் லைன்ஸ்'க்கு புதிய இயக்குநர் சபை நியமனம்!

கொழும்பு, ஒக். 11

தேசிய விமான சேவை நிறுவனமான சிறீ லங்கன் எயார் லைன்ஸ் புதன்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் புதிய பணிப்பாளர் சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சிறீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் புதிய தலைவராக சரத் கனேகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

சரத் கனேகொட தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள புதிய இயக்குநர்கள் குழுவில் சுகத் ராஜபக்ஷ, எரங்க றொகான் பீரிஸ் குணதிலக, டி அரந்தரா, ஆனந்த அத்துகோரள, லக்மால் ரத்நாயக்க, நிரஞ்சன் அருள்பிரகாசம் ஆகியோர் உள்ளனர். (ஐ)

# 50 பேருடன் பயணித்த பேருந்து திடீரென தீப்பிடித்து எரிந்தது!

கொழும்பு, ஒக். 11

50இற்கும் மேற்பட்ட பயணிகளுடன் சென்ற பேருந்து நேற்று திடீரென தீப்பிடித்து எரிந்தது.

நேற்று வியாழக்கிழமை காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து இரத்தினபுரி - எம்பிலிப்பிட்டி நோக்கி பயணித்த பேருந்தே மாதம்பகவுடுவாவ பகுதியில் தீப்பிடித்து எரிந்து நாசமானது.

எனினும், அதிர்ஷ்டவசமாக பயணிகள் எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. எனினும், சிலரின் உடைமைகள் தீயில் அழிந்தன என்று கூறப்படுகின்றது.

அந்தப் பகுதி மக்களின் உதவியுடன் பேருந்தில் பரவிய தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. (ஐ)



# போக்குவரத்து அமைச்சின் 25 வாகனங்கள் மாயம்!

கொழும்பு, ஒக். 11

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள 10 கார்கள், 2 மோட்டார் சைக்கிள்கள், 10 கெப் ரக வண்டிகள் , 2 ஜீப்கள் மற்றும் ஒரு லொறி என்பன காணாமல் போயுள்ளன என்று இலங்கைத் தேசிய கணக்காய்வு அறிக்கை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனங்களை தற்போது பயன்படுத்துபவர்கள் தொடர்பில் தகவல்களை ஆராய முடியாமல் உள்ளதாகவும் கணக்காய்வு அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

இந்த வாகனங்கள் தொடர்ந்து முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டதற்கான எந்த ஆதாரமும் வெளியாகவில்லை என்றும் தணிக்கை அறிக்கை கூறுகிறது.

மேலும், 2023 டிசெம்பர் 31ஆம் திகதி நிலவரப்படி, இந்த வாகனங்கள் அமைச்சகத்தின் வாகன பட்டியல் மற்றும் சொத்து கணக்கில் சேர்க்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணத்தில் 67 பேருக்கு எய்ட்ஸ் நோய்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஒக். 11

**கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் 67 பேருக்கு எய்ட்ஸ் நோய் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

இந்த நிலையில், மாகாணத்தில் எய்ட்ஸ் நோயை தடுப்பதற்கு ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகர தீவிர நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளை பணித்துள்ளார்.

இதற்கமைய மட்டக்களப்பு நகரில் எய்ட்ஸ் நோய் தடுப்பு பற்றிய மாகாண மட்டத்திலான விசேட கருத்தரங்கு ஆளுநர் தலைமையில் நடைபெற்றது.

இந்த கருத்தரங்கில் திருகோணமலை மாவட்டத்தில் 26 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 25 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 16 பேருமாக 67 பேருக்கு எய்ட்ஸ் நோய் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மத்திய சுகாதார அமைச்சு, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுடன் இணைந்து கிழக்கு மாகாணத்தில் எய்ட்ஸ் நோயை இல்லாது செய்வதற்கு தீவிர நடவடிக்கை எடுப்பதற்கான திட்டமிடல்கள் தற்போது செய்யப்பட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட கருத்தரங்கில் கிழக்கு மாகாணத்தில் எய்ட்ஸ் நோயை கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரத் திணைக்களம் மாத்திரமன்றி ஏனைய அரச திணைக்களங்களின் ஒத்துழைப்பை பெற்று, இந்தத் திட்டத்தை விரிவாக மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த கருத்தரங்கில் ஆளுநர் கூறுகையில்,

"எய்ட்ஸ் நோயை கிழக்கு மாகாணத்தில் ஒழித்துக் கட்டுவதற்கு எடுக்கப்படும் தீவிர நடவடிக்கைகளுக்கு சகல அரச திணைக்களங்களின் அதிகாரிகள், வைத்திய சேவையாளர்கள் மற்றும் சுகாதார சேவை திணைக்களத்தின் பணியாளர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" - என்றார். (எ)



# மீனவ குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

காரைதீவு, ஒக். 11

மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் காரைதீவு விநாயகர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தை சேர்ந்த 53 தெரிவு செய்யப்பட்ட மீனவ குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரான செ. இராசையாவின் ஏற்பாட்டில் காரைதீவு கடற்கரை பிள்ளையார் ஆலய முன்றலில் காரைதீவு விநாயகர் மீனவர் கூட்டுறவுச் சங்க செயலாளர் ர. சுஜிதன் நெறிப்படுத்தலில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இதன்போது உரையாற்றிய ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் அம்பாறை மாவட்ட பிரதான அமைப்பாளர் செ. இராசையா கூறுகையில், எதிர்வரும் பொதுத் தேர்தலில் திகாமடுல்ல மாவட்டத்தில் ஈ. பி. டி. பி. தனித்து போட்டியிட உள்ளது. அத்துடன் ஒரு முஸ்லிம், ஒரு சிங்கள வேட்பாளர் உட்பட 10 பேர் அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில், சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை பிரதேசங்களில் இருந்து வேட்பாளர்களாக தெரிவு செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார். (எ)



# கார்மேல் பற்றிமா முதலிடம்

கல்முனை, ஒக். 11

கல்முனை கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விவாத போட்டியில் கார்மேல் பற்றிமா கல்லூரி முதலிடம் பெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹுறுதுல் நஜீமின் ஆலோசனைக்கு அமைவாக இந்த விவாத அரங்கு புதன்கிழமை நடைபெற்றது.

கல்வி முகாமைத்துவத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் யூ. எல். நியாவின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இவ்விவாத அரங்கில் இந்த ஆண்டின் எழுத்தறிவு தின சம்பியன் பட்டத்தை கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியும், இரண்டாம் இடத்தை மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரியும், மூன்றாம் இடத்தை கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியும் பெற்றுக்கொண்டன. (எ)

# மார்பக புற்றுநோய் தொடர்பில் கிண்ணியாவில் விழிப்புணர்வு

கிண்ணியா, ஒக். 11

திருகோணமலை, கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட மார்பக புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று நடைபெற்றது.

தேசிய புற்றுநோய் கட்டுப்பாடு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது.

இதில் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி எம். எச். எம். ரிஸ்வி, குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி எம். ஏ. எம். அஜித், கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச். எம். கனி, சுகாதார வைத்திய உத்தியோகத்தர்கள், கிண்ணியா பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், கிண்ணியா நகர சபை ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன்பு ஆரம்பித்த இந்த ஊர்வலம் கிண்ணியா புஹாரியடி சந்தி ஊடாக சென்று மீண்டும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையை அடைந்தது. (எ)

# சிறுவர் உரிமை, பாதுகாப்பு குறித்து மதிப்பீட்டு பரீட்சை

## களுவாஞ்சிக்குடியில் புதிய அணுகுமுறை

களுவாஞ்சிக்குடி, ஒக். 11

சுய பாதுகாப்பு கொண்ட மாணவர் சமூகத்தை உருவாக்கு தலை முன்னிலைப்படுத்தி பாடசாலை மாணவர்களுக்கு சிறுவர் உரிமை மற்றும் பாதுகாப்பு தொடர்பான மதிப்பீட்டு பரீட்சையொன்று களுவாஞ்சிக்குடியில் நடைபெற்றது.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வ ரத்னத்தின் வழிகாட்டுதலின் கீழ், உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்தியகௌரி தரணிதரனின் நெறிப்படுத்தலில்

பட்டிருப்பு வலய கல்விப் பணிப்பாளர் சி. சிறிதரனின் ஒத்துழைப்புடன் இந்தப் பரீட்சை ஏற்பாடு செய்யப்பட்டது.

மண்முனை தென் எருவில் பற்று கோட்டத்துக்குட்பட்ட தரம் 10இல் கல்வி கற்கும் சகல பாடசாலை மாணவர்களுக்கான சிறுவர் உரிமை மற்றும் பாதுகாப்பு தொடர்பான மதிப்பீட்டு பரீட்சை கோட்டத்தில் உள்ள 18 பாடசாலைகளிலும் அதிபர்களின் தயார்ப்படுத்தலுடன் புதன்கிழமை நடைபெற்றது.



இப் பரீட்சையானது சிறுவர்கள் ஆபத்தான சூழலுக்கு முகங் கொடுக்கக் கூடிய வேளையில் பாதுகாப்பு பெறும் படிமுறைகள் தொடர்பில் எவ்வாறான முறைமையை அறிந்திருக்க வேண்டும் எனும் சிந்தனையின் அடிப்படையில் பதின்ம வயதினர் மத்தியில் தமது பாதுகாப்பு பொறிமுறைகள் மற்றும் சிறுவர்களுக்குரிய கடமைகள், பொறுப்புகள், கட்டாயக் கல்வியின் அவசியம், இலங்கையில் சிறுவர் பாதுகாப்பு சட்ட ஏற்பாடுகள், சிறுவர் பாதுகாப்பு பொறிமுறைகள், மற்றும் பாதுகாப்பான இணைய பாவனை, சிறுவர்கள் தொடர்பில் சமகால போக்குகள், குழந்தை விருத்தி படிநிலைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்புடன் தொடர்புடைய ஏனைய விடயங்களையும் விடய பரப்பாக கொண்டமைந்ததுடன் அவர்களது அறிவுத்திறன் மற்றும் மனப்பாங்கு விருத்தியை மேம்படுத்துவதையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது.

குறித்த பரீட்சை நடவடிக்கைகளுக்காக பிரதேச செயலகத்திலிருந்து சுமார் 50 உத்தியோகத்தர்கள் சகல பரீட்சை நிலையங்களிலும் இணைக்கப்பட்டிருந்தனர். (எ)

# ஐக்கிய மக்கள் சக்தியில் ஒருவரே தமிழ் வேட்பாளர்

கல்முனை, ஒக். 11

அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் சமூக செயற்பாட்டாளர் வெ. வினோகாந்த் போட்டியிடுகிறார்.

பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்பு மனுவில் அவர் கையொப்பமிட்டுள்ளார்.

அந்தக் கட்சி சார்பில் அம்பாறையில் போட்டியிடும் ஒரே ஒரு தமிழ் வேட்பாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலின் தாக்குதல்களில் காஸாவில் 42,000 பேர் பலி

காஸா முனை, ஒக். 11

**காஸாவில் இஸ்ரேல் - ஹமாஸ் இடையே நீடித்து வரும் போரில் 42 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். 97 ஆயிரத்து 720 பேர் காயமடைந்தனர்.**

காஸா முனையில் செயல்பட்டு வரும் ஹமாஸ் போராளிகள் 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து ஹமாஸ் அமைப்பினர் மீது போர் அறிவித்த இஸ்ரேல் ஒப்பந்த அடிப்படை, இராணுவ நடவடிக்கை மூலம் 117 பணயக் கைதிகளை உயிருடன் மீட்டது.

இந்த நிலையில், இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் பலஸ்தீனத்தின் காஸா முனையில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 42 ஆயிரத்து 10 ஆக அதிகரித்தது. மேலும் 97 ஆயிரத்து 720 பேர் காயமடைந்தனர் என்று ஹமாஸ் அமைப்பின் கீழ் செயல்பட்டுவரும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அத்தோடு, பலஸ்தீனத்தின் மேற்கு கரையில் ஏற்பட்ட மோதலில் 700இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஜம்மு காஷ்மீர் தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி

புதுடில்லி, ஒக். 11

90 சட்டப்பேரவை தொகுதிகளை கொண்ட ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்துக்காக நடைபெற்ற தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைக்கிறது.

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்துக்கு மூன்று கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி ஒக்ரோபர் எட்டாம் திகதியன்று நடைபெற்றது.

இதில் தேசிய மாநாட்டு கட்சி 42 இடங்களிலும், பாரதிய ஜனதா கட்சி 29 இடங்களிலும், இந்திய தேசிய காங்கிரஸ் ஆறு இடங்களிலும், ஜம்மு காஷ்மீர் மக்கள் ஜனநாயகக் கட்சி மூன்று இடங்களிலும், ஜம்மு காஷ்மீர் மக்கள் கட்சி ஓர் இடத்திலும், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஓர் இடத்திலும், ஆம் ஆத்மி கட்சி ஓர் இடத்திலும், ஏழு இடங்களில் சுயேச்சை உறுப்பினர்களும் வெற்றி பெற்றனர்.

இதனால் இந்தியா கூட்டணி ஆட்சி அமைக்கிறது. இந்த கூட்டணியின் சார்பில் முன்னாள் முதல்வர் உமர் அப்துல்லா முதல்வராக பதவி ஏற்பார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ)


# பிரபல தொழிலதிபர் ரத்தன் டாடா மறைவு

புதுடில்லி, ஒக். 11

டாடா குழுமத்தின் முன்னாள் தலைவர் ரத்தன் டாடா வயது முதிர்ச்சி காரணமாக காலமானார்.

இந்தியாவின் மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றான டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவர் ரத்தன் டாடா, கடந்த திங்கட்கிழமை மும்பையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில், ரத்தன் டாடா சிகிச்சை பலனின்றி தனது 86ஆவது வயதில் காலமானார்.



புத்திசாலித்தனம், தொலைநோக்கு பார்வை மற்றும் பணி நெறிமுறைகளுக்கு பெயர் பெற்ற ரத்தன் டாடா, தனது குடும்ப வணிகத்தை சர்வதேச சாம்ராஜ்ஜியமாக மாற்றியவர்.

தொழிலதிபர் ரத்தன் டாடா மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட பலரும் ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துள்ளனர். (எ)


# புரத ஆராய்ச்சிக்காக 3 விஞ்ஞானிகளுக்கு வேதியியலுக்கான நோபல் பரிசு அறிவிப்பு

ஸ்டாக்ஹோம், ஒக். 11

வேதியியலுக்கான நோபல் பரிசு, அமெரிக்காவின் டேவிட் பேக்கர், இங்கிலாந்தின் டெமிஸ் ஹசாபிஸ் மற்றும் ஜோன் ஜம்பர் ஆகிய மூன்று விஞ்ஞானிகளுக்கு புரத ஆராய்ச்சி பணிக்காக அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், அமைதி, பொருளாதாரம் ஆகிய 6 துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு விருதுக்கும் சுமார் 10 இலட்சம் டொலர்கள் (இந்திய மதிப்பில் 8. 30 கோடி ரூபாய்) பரிசுத் தொகையாக வழங்கப்படவுள்ளது.




இன்று வெள்ளிக்கிழமை அமைதிக்கான நோபல் பரிசும், 14ஆம் திகதி பொருளாதாரத்துக்கான நோபல் பரிசும் அறிவிக்கப்படவுள்ளன. நோபல் பரிசு வெற்றியாளர்களுக்கு டிசெம்பர் மாதம் முதலாம் திகதி பரிசுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# தென்கொரியாவுடனான எல்லைகள் துண்டிப்பு

**வடகொரிய அரசு தகவல்**

பியோங்யாங், ஒக். 11

தென்கொரியா செல்லும் வீதிகள், ரயில் வழித்தடங்களை மூட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த சில வாரங்களாக வடகொரிய தீபகற்பத்தில் பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது. அணு ஆயுத மூலப்பொருளான யுரேனியம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள வடகொரியா ஏவுகணை சோதனையிலும் ஈடுபட்டு வருகிறது.


இந்த நிலையில் தென்கொரியாவுடனான எல்லைப் பகுதிகளை நிரந்தரமாக துண்டிக்க உள்ளதாக வடகொரிய அரசு தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன்படி வட கொரியாவில் இருந்து தென் கொரியா செல்லும் வீதிகள், ரயில் வழித்தடங்களை மூட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், எல்லைப் பகுதிகளில் கண்ணி வெடிகளைப் புதைத்து, தடுப்புகள் ஏற்படுத்தி, கூடுதல் இராணுவ வீரர்களை நிறுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (எ)

# ஜப்பான் பாராளுமன்றம் கலைப்பு

ரோக்கியோ, ஒக். 11

ஜப்பானில் தாராளவாத ஜனநாயக கட்சி தலைமையிலான ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்தக் கட்சியின் தலைவரான புமியோ கிஷிடா கடந்த 2021இல் பிரதமராக பொறுப்பேற்றார். ஆனால், அவரது அரசாங்கத்தின் மீது தொடர்ந்து ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதால் இராஜிநாமா செய்வதாக அறிவித்தார். அவர் மூன்று ஆண்டுகளே பதவியில் இருந்தார்.

இதனையடுத்து புதிய பிரதமரை தெரிவு செய்ய வேண்டிய கட்டாயம் ஆளுங்கட்சிக்கு ஏற்பட்டது. பிரதமர் பதவிக்கு அதாவது கட்சி தலைவர் பதவிக்கு 9 பேர் போட்டியிட்டனர். இதற்கான வாக்கெடுப்பு கடந்த முதலாம் திகதி நடந்தது. இதில் ஷிகெரு இஷிபா வெற்றி பெற்று பிரதமராக பதவியேற்றார். இதையடுத்து, பாராளுமன்றத்தை கலைத்துவிட்டு முன்கூட்டியே தேர்தலை நடத்த முடிவு செய்தார். இதன்படி, ஜப்பான் பாராளுமன்றத்தை (கீழ்சபை) கலைத்து பிரதமர் ஷிகெரு இஷிபா உத்தரவிட்டுள்ளார். (எ)




# புளோரிடா மாநிலத்தை புரட்டிப்போட்ட 'மில்டன்'

**மக்கள் கடுமையாக பாதிப்பு**

வாஷிங்டன், ஒக். 11

அமெரிக்காவுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கும் மில்டன் புயல், புளோரிடாவை நெருங்கிய போது மணிக்கு 195 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசியது என்று அமெரிக்க புயல் எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது.

இந்தப் புயல் காரணமாக புளோரிடா மாகாணத்தில் 20 இலட்சத்துக்கும் அதிகமான வீடுகள் மற்றும் வணிக வளாகங்கள் மின்சாரம் இல்லாமல் இருளில் மூழ்கின. சரசோடா கவுண்டி அதன் அண்டைப் பகுதியில் இருக்கும் மனாடீ கவுண்ட் பகுதிகளில் தான் அதிகள்விலான மின்தடை ஏற்பட்டுள்ளது. புளோரிடாவின் கிழக்கு கடற்கரை. பகுதியில் உள்ள புனித லூசி கவுண்டியில் 10 இற்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்பட்டதாக தகவல் வெளியானது.

முன்னதாக இரண்டு வாரங்களுக்கு முன்பு ஹெலேன் புயலால் புளோரிடாவில் இருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு உத்தரவிடப்பட்டது. ஹெலேன் மற்றும் மில்டன் புயல்களால் புளோரிடாவில் பலத்த சேதம் ஏற்பட்டது.

ஜனாதிபதி ஜோ பைடன் கூறுகையில், இந்த நூற்றாண்டில் புளோரிடாவைத் தாக்கிய புயல்களில் மில்டன் புயல் மிகவும் ஆபத்தானது மற்றும் அழிவுகரமானது என்று தெரிவித்தார். மக்கள் உள்ளூர் பாதுகாப்பு வழிமுறைகளை மற்றும் பரிந்துரைகளை பின்பற்ற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (எ)

# காஸாவில் இஸ்ரேல் வான்வழி தாக்குதல்

காஸா, ஒக். 11

காஸாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 16 பேர் பலியாகினர்.

இதேவேளை, இஸ்ரேலின் சிறப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில், மேற்கு கரை பகுதியில் வாகனத்தில் சென்ற பலஸ்தீனிய இளைஞர்கள் 4 பேர் உயிரிழந்தனர்.

காஸாவின் வடக்கே ஜபாலியா நகரில் பெய்த் லாஹியா பகுதியிலுள்ள கமல் அத்வான் மருத்துவமனையில் இடம்பெயர்ந்த மக்கள் பாதுகாப்பு கோரி தஞ்சமடைந்தனர்.

இஸ்ரேல் இராணுவத்தினர் இந்தப் பகுதியில், வான்வழித் தாக்குதலில் ஈடுபட்டனர். இந்த தாக்குதலில், மருத்துவமனையில் தஞ்சமடைந்திருந்த பொது மக்களில் 16 பேர் உயிரிழந்தனர். அவர்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளும் அடங்குவர். 20இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து அவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# 86 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி

## ரி - 20 தொடரை இழந்தது பங்களாதேஷ்



புதுடில்லி, ஒக். 11

இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ரி - 20 போட்டியில் 86 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி பெற்றது.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் 2 - 0 என்ற கணக்கில் இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.

டில்லியில் உள்ள அருண் ஜெட்லி கிரிக்கெட் மைதானத்தில் இரண்டாவது ரி - 20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 221 ஓட்டங்கள் எடுத்தது.

222 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை பங்களாதேஷ் அணி விரட்டியது. இருப்பினும் அந்த அணி 100 ஓட்டங்களை எட்டுவதற்குள் 7 விக்கெட்களை இழந்து தடுமாறியது. மஹ்மதுல்லா மட்டுமே களத்தில் நிலைத்து நின்று ஆடினார். 39 பந்துகளில் 41 ஓட்டங்கள் எடுத்து அவர் ஆட்டமிழந்தார். இந்த நிலையில் 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 135 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது பங்களாதேஷ். இதன் மூலம் 86 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது. (எ)

# ஹாரி புரூக், ஜோ ரூட் அபார துடுப்பாட்டம்

## இங்கிலாந்து இமாலய ஓட்ட குவிப்பு

முல்தான், ஒக். 11

பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்கள் இழப்புக்கு 823 ஓட்டங்கள் குவித்தது. அந்த அணி சார்பில் ஹாரி புரூக் 317 ஓட்டங்களும் ஜோ ரூட் 262 ஓட்டங்களும் எடுத்தனர்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி முல்தானில் நடைபெற்று வருகிறது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் தனது முதல் இன்னிங்ஸில் 149 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 556 ஓட்டங்கள் எடுத்தது. பாகிஸ்தான் சார்பில் ஷபீக் 102 ஓட்டங்களும், ஷான் மசூத் 151 ஓட்டங்களும், ஆகா சல்மான் 104 ஓட்டங்களும் எடுத்தனர்.

இதையடுத்து தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து 3ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 101 ஓவர்களில் 3 விக்கெட்கள் மட்டும் இழந்து 492 ஓட்டங்கள் குவித்தது. இங்கிலாந்து தரப்பில் ஜோ ரூட் 176 ஓட்டங்களும், ஹாரி புரூக் 141 ஓட்டங்களும் எடுத்து களத்தில் இருந்தனர். இந்த நிலையில் நேற்று 7 விக்கெட்கள் இழப்புக்கு 823 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது இங்கிலாந்து அணி. இரண்டாவது இன்னிங்ஸில் இன்னும் 218 ஓட்டங்கள் பின்தங்கியுள்ள பாகிஸ்தான் 49 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்களை இழந்துள்ளது. இதனால் முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெறும் சூழல் உருவாகியுள்ளது. (எ)






# இந்திய மகளிர் வெற்றி; இலங்கை படுதோல்வி!

டுபாய், ஒக். 11

மகளிர் ரி - 20 உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணியை 82 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்திய அணி அபார வெற்றி பெற்றது.

9ஆவது மகளிர் ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள டுபாய் மற்றும் சார்ஜாவில் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 10 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.

லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெறும். இந்த நிலையில், இந்தத் தொடரில் நேற்று முன்தினம் டுபாயில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா - இலங்கை அணிகள் மோதின.

இதையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய மகளிர் அணி, 20 ஓவர்களில் 3 விக்கெட்களை மட்டும் இழந்து 172 ஓட்டங்கள் குவித்தது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஹர்மன்ப்ரீத் கவுர் 52, ஸ்மிருதி மந்தனா 50 ஓட்டங்கள் எடுத்தனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 19. 5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 90 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் இந்திய அணி 82 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (எ)

# இலங்கை - மே. இ. தீவுகள் மோதும் ரி - 20 போட்டிகள்

கொழும்பு, ஒக். 11

இலங்கை - மேற்கு இந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான சர்வதேச ரி - 20 கிரிக்கெட் போட்டிகள் ரங்கிரி தம்புள்ளை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இம்மாதம் 13, 15, 17ஆம் திகதிகளில் இரவு போட்டிகளாக நடைபெறவுள்ளன.

இந்தத் தொடரை முன்னிட்டு 17 வீரர்களைக் கொண்ட பலம்வாய்ந்த இலங்கை குழாம் பெயரிடப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு எதிராக கண்டியில் ஜூலை மாதம் நடைபெற்ற சர்வதேச ரி - 20 தொடரில் 0 - 3 என்ற ஆட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்த இலங்கை அணியில் இடம்பெற்ற முன்னாள் அணித் தலைவர் தசுன் ஷானக்க, துஷ்மன்த சமீர ஆகியோருக்கு இம்முறை வாய்ப்பு வழங்கப்படவில்லை.

அதிரடி வீரர் பானுக்க ராஜபக்ஷ மீண்டும் குழாத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

இலங்கை அணியின் தலைவராக தொடர்ந்து சரித் அசலங்க நியமிக்கப்பட்டுள்ளதுடன் இளம் வீரர் சமிந்து விக்கிரமசிங்கவுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு எதிரான கடைசி ரி - 20 போட்டியில் அறிமுகமான சமிந்து விக்கிரமசிங்க அப் போட்டியில் 4 ஓவர்கள் வீசி 17 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து ஒரு விக்கெட் கைப்பற்றியிருந்தார்.

இதேவேளை, வேகப்பந்து வீச்சாளர்களான மதீஷ பத்திரண, நுவன் துஷார, துடுப்பாட்ட வீரர் அவிஷ்க பெர்னாண்டோ ஆகியோரும் குழாத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, இந்தியா, இங்கிலாந்து, நியூசிலாந்து ஆகிய அணிகளுக்கு எதிரான தொடர்களில் இடைக்காலப் பயிற்றுநராக இலங்கை அணியை வெற்றிப் பாதைக்கு வழிநடத்திய சனத் ஜெயசூரிய, முழு நேரப் பயிற்றுநராக மேற்கு இந்திய தீவுகளுக்கு எதிரான தொடருடன் தனது பணியை ஆரம்பிக்கவுள்ளார். (எ)


# காலிறுதியில் ஜோகோவிச்

பீஜிங், ஒக். 11

ஷங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியில் நோவக் ஜோகோவிச் காலிறுதிக்கு முன்னேறினார்.

ஷங்காய் மாஸ்டர்ஸ் ரெனிஸ் தொடர் சீனாவில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற போட்டியில் உலகின் முன்னணி வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ரஷ்யாவின் ரோமன் சபியுலினுடன் மோதினார்.

இந்தப் போட்டியில் ஆரம்பம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜோகோவிச் 6 - 3, 6- 2 என்ற நேர் செட் கணக்கில் ரஷ்யாவின் ரோமன் சபியுலினை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். (எ)



# இந்திய டெஸ்ட் தொடருக்கான நியூசிலாந்து அணி அறிவிப்பு

வெலிங்டன், ஒக். 11

நியூசிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடரின் முதல் டெஸ்ட் போட்டி வரும் 16ஆம் திகதி பெங்களூருவில் தொடங்குகிறது. இந்த நிலையில் இந்தத் தொடருக்கான 17 பேர் கொண்ட நியூசிலாந்து அணியை அந்த நாட்டு கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ரொம் லேதம் (தலைவர்), கேன் வில்லியம்சன், ரொம் பிளண்டெல், மைக்கேல் பிரேஸ்வெல், மார்க் சப்மேன், டெவான் கான்வே, மேட் ஹென்றி, டேரியல் மிட்செல், வில் ரூர்க்கி, அஜாஸ் பட்டேல், கிளென் பிலிப்ஸ், ரச்சின் ரவீந்திரா, மிட்செல் சாண்ட்னர், பென் சியர்ஸ், இஷ் சோதி, ரிம் சவுதி, வில் யங் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாணாக்க உழவர் போட்டி ஆரம்ப நிகழ்வு நேற்று!

யாழ்ப்பாணம், ஒக். 11

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் மாணவர்களிடையே வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் 'மாணாக்க உழவர்' எனும் வீட்டுத் தோட்டப் போட்டியை நடத்தி வருகின்றது. இந்த ஆண்டுக்கான போட்டிக்குரிய விதைப் பொதிகளையும் செயன்முறை விளக்கங்களையும் மாணவர்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி நேற்று வியாழக்கிழமை தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் மாணாக்க உழவர் போட்டியில் கலந்துகொள்ள விண்ணப்பித்த மாணவர்களுக்கு விதைப் பொதிகளையும் நாற்றுகளையும் வழங்கி வைத்து செயன்முறை விளக்கங்களையும் அளித்தார்.

போட்டியில் பங்கேற்கும் மாணவர்கள் இவ்வருட இறுதியில் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவதோடு, மதிப்பீட்டு குழுவினர் வீட்டுத் தோட்டங்களையும் நேரடியாகப் பார்வையிட்டு பரிசுக்குரியவர்களைத் தெரிவுசெய்யவுள்ளார்கள்.

பங்கேற்கும் அனைவருக்கும் மாணாக்க உழவர் சான்றிதழ்களும், மதிப்பீட்டின் அடிப்படையில் சிறந்த செய்கையாளர்களுக்கு விசேட பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

பரிசளிப்பு நிகழ்ச்சி 2025ஆம் ஆண்டு தொடக்கத்தில் நடைபெறவுள்ள பசுமை அமைதி விருதுகள் விழாவில் வழங்கப் படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி, உணவுக்கான நெருக்கடி, இயற்கைப் பசளைகளின் மூலம் நஞ்சற்ற உணவு உற்பத்தி, பாரம்பரிய விதைகளின் பாதுகாப்பு, மாணவர்கள் தங்கள் ஓய்வு நேரங்களை பயனுள்ளதாக் கழிக்க வேண்டிய அவசியம் ஆகிய பல காரணங்களைக் கருத்தில் கொண்டே மாணாக்க உழவர் என்னும் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

## காணி...

பிணக்கு நிலவியது.

இந்த நிலையில், பிணக்குக்குரிய காணியில் தாய் மாமனும் மருமகனும் வேலை செய்து கொண்டிருந்தனர். அந்தச் சமயம் அங்கு வந்த சிலர் அவர்கள் மீது மிளகாய் தூளை வீசிவிட்டு வாளால் வெட்டியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் இரு பிள்ளைகளின் தந்தையான இளங்கோ (வயது 38) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அத்துடன், மூன்று பிள்ளைகளின தந்தையான ரூ. திலீபன் (வயது 42) என்பவர் ஊரவர்களால் மீட்கப்பட்டு வவுனியா ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## தனியாக...

வீடு திரும்பியிருந்தார். இந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை காலை எரியுண்ட நிலையில் அவரின் சடலம் மீட்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு சென்ற கரவெட்டி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார். தடயவியல் பொலிஸாரும் தடயங்களை பெற்றுக்கொண்டனர்.

சடலம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## த.தே.ம....

அவர் அந்தக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடுகிறார். இது தொடர்பில் விளம்பர படங்களை தயாரித்து பேஸ்புக்கில் பதிவிட்டும் வந்துள்ளார்.

இந்த நிலையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி வன்னி தேர்தல் மாவட்டத்தில் நேற்று வேட்புமனுவை தாக்கல் செய்தது. அந்த வேட்புமனுவிலும் குறித்த யுவதி கையொப்பமிட்டுள்ளதுடன், வேட்புமனுவும் தாக்கல் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஒக்.30...

பணிகளில் ஈடுபடுவோர் தபால் மூலம் வாக்களிக்கலாம்.

இதன்படி, மாவட்ட செயலக பணிமனைகள், தேர் தல் ஆணைக்குழு பணிமனைகள், பொலிஸ்நிலையங் கள் மற்றும் பொலிஸ் பிரிவின் ஏனைய பணிமனைகளில் பணிபுரிப வர்கள் ஒக்ரோபர் 30 மற்றும் நவம்பர் 4 ஆகிய இரு திகதிகளில் தபால் மூலம் வாக்களிக்க முடியும்.

மேலும், அரச பணிமனைகள் மற்றும் இராணுவ முகாம்களில் பணிபுரிபவர்கள் நவம்பர் 1, நவம்பர் 4 ஆகிய இரு திகதிகளில் தபால் மூலம் வாக்களிக்க முடியும்.

இதேவேளை, தபால் மூல வாக்களிப்புக்காக வழங்கப்பட்டுள்ள திகதிகளில் வாக்களிக்க முடியாத அனைத்து அரச ஊழியர்களும் நவம்பர் 7, 8ஆம் திகதிகளில் தபால் மூலம் வாக்களிக்க கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# மகிந்த, பஸில், சமல் ஆகியோருக்கு தேசிய பட்டியலிலும் இடமில்லை!

கொழும்பு, ஒக். 11

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ ஆகியோர் நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிட மாட்டார்கள். அத்துடன், அவர்களுக்கு தேசியப் பட்டியலிலும் இடம் வழங்கப்படாது என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

மேலும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட நாமல் ராஜபக்ஷவுக்கு மட்டும் தேசியப் பட்டியலில் இடம் வழங்கப்பட்டுள்ளது என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

மேலும், ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சசீந்திர ராஜபக்ஷ மொனராகலை மாவட்டத்திலும் நிபுண ரணவக்க மாத்தறை மாவட்டத்திலும் போட்டியிடவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களில் பொதுஜன பெரமுன வேட்பாளர்கள் கையொப்பமிடும் நிகழ்வு நேற்று மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. (ஐ)

# தேர்தல் போட்டியிலிருந்து சம்பிக்கவும் விலகினார்!

கொழும்பு, ஒக். 11

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று பாட்டாலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணியிலிருந்தும் தான் வெளியேறுகிறார் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கை மூலம் இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டுள்ளார். (ஐ)

# சீனி தொழிற்சாலை காணியை பயிர் செய்கைக்கு வழங்க பணிப்பு

## ஜனாதிபதி அநுரகுமார விடுத்தார்



கொழும்பு, ஒக். 11

கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்கு சொந்தமான 11 ஆயிரம் ஏக்கர் காணியை குறுகிய கால பயிர் செய்கைக்காக விவசாயிகளுக்கு வழங்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வியாழக்கிழமை அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இதற்கமைய ஐந்து ஏக்கரைவிட குறைவான காணி இவ்வாறு வழங்கப் படவுள்ளதுடன், அதற்கென ஒழுங்கான பொறிமுறைமையொன்றை தயாரிக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் அதிகாரிகளை ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று பிற்பகல் சந்தித்த போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து ஜனாதிபதி கேட்டறிந்ததோடு, எதிர்கால திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடினார்.

விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சின் செயலாளர் எம். பி.என்.எம். விக்ரமசிங்க, காணி ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் ஹேமசிறி லியனகே மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# வேட்புமனு தாக்கல் செய்யும் காலம் இன்றுடன் நிறைவு!

கொழும்பு, ஒக். 11

பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளும் காலம் இன்று வெள்ளிக்கிழமை நண்பகலுடன் நிறைவடைகிறது - என்று தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் செய்யும் காலம் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைகிறது.

இதேவேளை, இன்று நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 1.30 வரை வேட்பு மனுக்கள் தொடர்பிலான ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை சமர்ப்பிக்க அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் செய்யப்பட்டுள்ளன.

இன்று மதியம் 1.30 மணிக்கு வேட்பு மனுக்கள் தொடர்பில் இறுதி அறிவிப்பு வெளியான பின்னர் கூட்டங்கள், பேரணிகள் நடத்துவதற்கு தடை விதிக்கப் பட்டுள்ளது. (ஐ)

## இலங்கை தமிழ்...

சயந்தன், சந்திரலிங்கம் சுகிர்தன், சுரேகா சசீந்திரன், இமானுவல் ஆனல்ட், கிருஷ்ணவேணி சிறீதரன், தியாகராஜா பிரகாஷ் ஆகி யோரும் உடனிருந்தனர்.

வேட்புமனு தாக்கல் செய்ததன் பின்னர் வேட்பாளர்கள் தந்தை செல்வாவின் நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்தியிருந்தனர். (ஐ-05)

## தமிழ் அரசு...

வரை வேட்பாளர் தெரிவு நடைபெற்றது.

இந்த சுயேச்சை குழுவின் முதன்மை வேட்பாளராக கே. வி. தவராசா, ஈ. சரவணபவன், பொ. ஐங்கரநேசன், சிறீ. விமலேஸ்வரி, கார்த்தீபன், த. ஐங்கரன், ஜெ. பாலசுரேஷ், பி. வசந்தராஜ் ஆகியோர் போட்டியிடுகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தமிழ் அரசுக் கட்சியினர் மட்டக்களப்பில் வேட்புமனு

மட்டக்களப்பு, ஒக். 11

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட இலங்கை தமிழ் அரசுக் கட்சி நேற்று வேட்புமனுவை தாக்கல் செய்தது.

கட்சியின் வேட்பாளர்கள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் செயலகத்தில் வேட்பு மனுவை தாக்கல் செய்தனர்.

தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஞா. சிறீநேசன், இரா. சாணக்கியன் தி. சரவணபவன், சி. சர்வானந்தன், மருத்துவர் சிறீநாத், கி. சேயோன், அ. கருணாகரன், ஜெயந்தி ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

# செஹான் சேமசிங்கவும் தேர்தலில் போட்டியிடார்

கொழும்பு, ஒக். 11

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவிப்பை நேற்று வியாழக் கிழமை அவர் விடுத்தார்.

எனினும், தொடர்ந்தும் அரசியல் நடவடிக்கைகளில் தான் ஈடுபடுவேன் என்றும் நாட்டுக்கு தேவைப்படும் போதெல்லாம் தனது சேவைகளை வழங்குவேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# 152 கைபேசிகளுடன் வர்த்தகர் கைதானார்

கொழும்பு, ஒக். 11

152 கைபேசிகள் உட்பட சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட ஒரு கோடி ரூபாய் பெறுமதியான பொருட்களுடன் வர்த்தகர் ஒருவர் கட்டு நாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பை சேர்ந்த 44 வயது வர்த்தகரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 152 கைபேசிகள், 5 கைகணினிகள் (ரப்), 38 விஸ்கி போத்தல்கள், 44 வெளிநாட்டு சிகரெட்கள் என்பவை கைப்பற்றப்பட்டன.

குறித்த வர்த்தகர் இவற்றை வரி கட்டாமல் 4 பயணப் பைகளில் சட்டவிரோதமாக எடுத்து வந்தார் என்று கூறப்படுகின்றது. கைதான நபர் கட்டுநாயக்கா விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# வெளிநாடு செல்வதற்கு ஜோன்ஸ்டனுக்கு தடை!

கொழும்பு, ஒக். 11



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வெளிநாடு செல்ல கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று தடை விதித்தது.

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு வாகனத்தை வைத்திருந்த குற்றச்சாட்டிலயே அவருக்கு இந்தத் தடை விதிக்கப்பட் டுள்ளது.

முன்னதாக, கொழும்பு ஹில்டன் ஹோட்டலின் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போலி இலக்கத் தகடுகளைக் கொண்ட சொகுசு கார் ஒன்று முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவே பயன்படுத்தினார் என்று சில நாட்களுக்கு முன்னர் தெரிய வந்தது.

இது தொடர்பான அறிக்கையை கோட்டை நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பித்த குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வெளிநாடு செல்லத் தடை பெற்றுள்ளது. (ஐ)

# காணாமலாக்கப்பட்டோருக்கு நடந்தவற்றை அநுர அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம்

ஜெனிவா,ஒக்.11

**பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களுக்கு என்ன நடந்தது என்பதை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் புதிய அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஜெனிவாவுக்கான பிரதி இயக்குநர் லூசி மக்கேர்னன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

அத்துடன், இலங்கையில் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தும் - கடந்தகால அட்டூழியங்களுக்கு நீதியை தேடும் முயற்சிகளுக்கு இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை தீர்மானம் மிகவும் அவசியமானது.

பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தவர்களுக்கும் நீதி மறுக்கப்படுவது தொடர்ந்தால் இலங்கை தொடர்பில் சர்வதேச நடவடிக்கை அவசியம்.

பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களுக்கு என்ன நடந்தது என்பதை ஜனாதிபதி அனுரகுமார திஸநாயக்கவின் புதிய அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும், நீதியைத் தேடும் பாதிக்கப்பட்டவர்களை மனித உரிமை செயல்பாட்டாளர்களை படையினர் துன்புறுத்துவதை நிறுத்த வேண்டும், முன்னைய அரசாங்கங்களால் தடுக்கப்பட்ட குற்றங்கள் குறித்த விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# சதி செய்து அரசியல் ஆதாயம் அடைய நாங்கள் முயலவில்லை

## மரிக்கார் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 11

சதி மற்றும் நாசவேலை செய்து அரசியல் ஆதாயம் அடைய நாங்கள் முயலவில்லை. இழுத்தடிப்புகளை நாங்கள் மேற்கொள்ளவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் எஸ். எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

நாம் வரியை குறைத்து சலுகைகள் அளித்து அரசு வருவாயை அதிகரிக்க வேண்டும் என்று கூறினோம். இப்போது, அரசாங்கம் சில பெரிய வாக்குறுதிகளை அளித்துளது. அவை நிறைவேற்றப்பட வேண்டும்.

வரி குறைக்கப்பட வேண்டும், அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும், அரசின் வருமானத்தை அதிகரிக்க வேண்டும், முதலீடுகள் கொண்டு வரப்பட வேண்டும்.

அதை சுட்டாயப்படுத்துவதும் ஆதரிப்பதும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் முக்கிய பங்காகும். இடையூறு செய்து, சதி செய்து நாட்டை உடைப்பதால் கிடைக்கும் அரசியல் பலன்களை அனுபவிக்க எங்களுக்குத் தெரியாது.

மேடையில் சொன்னவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என நம்பிக்கை தெரிவிக்கின்றோம். கடன் வாங்கி நாட்டை கட்டியெழுப்ப முடியாது. நாட்டை சரியான பாதைக்கு கொண்டு வருவதற்கு நாங்கள் உழைத்து வருகிறோம் - என்றார். (ஐ)

# உளநல தினத்தை முன்னிட்டு மன்னாரில் விழிப்புணர்வு பேரணி!

மன்னார், ஒக். 11



சர்வதேச உளநல தினத்தை முன்னிட்டு "உங்களுக்கு உதவி செய்ய நாங்கள் இருக்கிறோம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்" எனும் தொனிப்பொருளில் மன்னாரில் விழிப்புணர்வு பேரணி நேற்று நடைபெற்றது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிராந்திய உளநல பிரிவு மற்றும் மன்னார் பொது மருத்துவமனையின் ஏற்பாட்டில் இந்த ஊர்வலம் நடைபெற்றது.

மன்னார் பொது மருத்துவமனையிலிருந்து ஆரம்பமான விழிப்புணர்வு பேரணி மருத்துவமனை வீதியூடாக மன்னார் பொலிஸ் நிலைய பிரதான வீதியை சென்றடைந்தது.

அங்கிருந்து மன்னார் பஜார் வீதியூடாக மன்னார் மாவட்ட செயலகம் சென்று அங்கிருந்து பொது விளையாட்டு மைதான வீதியை சென்றடைந்து மீண்டும் மன்னார் வீதியை அடைந்தது.

இந்த ஊர்வலத்தில் மன்னார் பொது வைத்தியசாலை பணிப்பாளர், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஊழியர்கள், உளநல பிரிவு மருத்துவ அதிகாரி, மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் பணியாளர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# நிலந்தவுக்கு எதிரான வழக்கு நவம்பர் 13இல் விசாரணைக்கு!

கொழும்பு, ஒக். 11

அரச புலனாய்வு சேவை முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜெயவர்த்தனவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு தேசிய பொலிஸ்ஆணைக்குழுவுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை எதிர்வரும் நவம்பர் 13 ஆம் திகதி அழைக்கப்படவுள்ளது.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

சமூக மற்றும் சமாதான நிலையத்தால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்றுமுன்தினம் சோபித ராஜ கருணா மற்றும் மகேன் கோபல்லவை ஆகிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் ஆராயப்பட்டபோதே அறிவிப்பு பிறப்பிக்கப்பட்டது.

ஏப்ரல் 21 தாக்குதல்கள் தொடர்பில் முன்கூட்டியே புலனாய்வு தகவல்கள் கிடைத்திருந்த போதிலும் அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்காமைக்கு எதிராக அரச புலனாய்வு சேவை முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்த்தன மீது வழக்கு தொடரப்பட்டமை தெரிந்ததே. (ஐ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org